**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 426/2016**

Deposition of the witness for Prosecution **PW** 3
Name : அழகு

Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (19.08.2025)

Accused present

முதல் விசாரணை

நான் மதுரையில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் முருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மற்றும் 20.12.2014 ம் தேதி தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். சுமார் 10 வருடத்திற்கு முன்பு இ-விலக்கு பக்கம் நானும், எனது நண்பர் முத்துக்குமாரும் வரும்போது போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் போலீசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். அதில் எழுதப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியாது. முருகன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4 ஆமகும். 20.12.2014 ம் தேதி தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 20.12.2014 ம் தேதி 17.00 மணிக்கு இ-விலக்கு பக்கம் போலீசார் வாகன தணிக்கை

செய்து கொண்டிருந்தபோது கருப்பு வெள்ளை கலர் பல்சர் மோட்டார் சைக்கிளில் வந்த முருகன் என்பவரை போலீசார் கைது செய்து என் முன்பும், முத்துக்குமார் முன்பும் விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 20.00 மணிக்கு கொடிக்குறிச்சியிலிருந்து சீவநல்லூர் செல்லும் ஓடையில் உள்ள பாலத்திற்கு அடியில் எதிரி எடுத்து ஆஜர் செய்த 108 மீட்டர் நீளமுள்ள கருப்பு நிற மீட்டர் கேபிள் ஒயரை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றால் சரியல்ல. மேற்படி அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், முத்துக்குமார் என்பவரும் கையெழுத்த செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.08.19 12:23:53 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai